**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. NO.124/2020**

**23.06.2023 - வா.சா. 1 அய்யாசாமி சத்திய பிரமாணத்தின் பேரில் 1 முதல் 9, 11 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் அப்பா பெயர் வெள்ளைய கவுண்டர். என் தாத்தா பெயர் அய்யாசாமி கவுண்டர். என் தாத்தாவிற்கு 3 பிள்ளைகள் அவர்கள் கரியகவுண்டர், நாராயண கவுண்டர் மற்றும் வெள்ளைய கவுண்டர் என்றால் சரிதான். மேற்சொன்ன மூவரும் தாவா சொத்துக்களையும் மற்ற இதர சொத்துக்களையும் பாகம் பிரித்ததில் தாவா சொத்து என் தகப்பனார் வெள்ளைய கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது. வெள்ளைய கவுண்டரின் மனைவி பெயர் பார்வதி அவருக்கு 5 பிள்ளைகள். நான் அய்யாசாமி, சுப்பிரமணி, வேலு, பழனி மற்றும் அண்ணாதுரை. இரண்டு பெண்கள் அம்மாக்கன்னு மற்றும் மல்லிகா. அம்மாக்கன்னு இறந்து விட்டார் அவரது வாரிசு தான் 10 பிரதிவாதி காந்தி என்றால் சரிதான்.

என் அப்பா உயிருடன் இருக்கும் போது அவருடைய 5 ஆண் பிள்ளைகளுக்கும், 2 பெண் பிள்ளைகளுக்கும் திருமணம் நடத்தி வைத்தார். குடும்பத்தில் 16.9.2000ல் ஒரு பாகப்பத்திரம் எழுதப்பட்டது என்றும், அதில் நாங்கள் அனைவரும் கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நெய்க்குப்பம் நமச்சிவாய கவுண்டர் குமாரர் குருநாதனை தெரியும். அதே கிராமத்தைச் சேர்ந்த சோனாசல கவுண்டர் குமாரர் நடராஜனை தெரியாது. அவர்கள் முன்னிலையில் தான் பாகப்பத்திரம் எழுதப்பட்டது என்றும், அவர்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பாகப்பத்திரத்தின் படி ஏ அட்டவணை சொத்து வெள்ளைய கவுண்டருக்கும், பி அட்டவணை சொத்து எனக்கும், சி அட்டவணை சொத்து சுப்பிரமணி, டி அட்டவணை சொத்து வேலு, அட்டவணை சொத்து பழனிக்கும், எப் அட்டவணை சொத்து அண்ணாதுரைக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

1989க்கு முன்பே இரு பெண்களுக்கும் திருமணம் ஆகி விட்டதால் அவர்களுக்கு பாகம் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரத்தின் அடிப்படையில் அவரவர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை இன்று வரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு ஒதுக்கிய 2/6 7

செண்ட் சொத்தை வழக்கின் அறிவிப்பில் கொடுத்துள்ளேன் ஆனால் தாவாவில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

மல்லிகாவின் மகன் முருகன். 15.9.2000ல் மல்லிகா கேட்டுக் கொண்டபடி என் தகப்பனார் மல்லிகாவின் மகன் முருகனுக்கு சர்வே எண். 2/3ல் 1308 சதுரடியை பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் முன்னிலைக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அச்சொத்தை முருகன் தான் இன்று வரை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 7.4.2001ல் திருவண்ணாமலை தாசில்தார் முறைப்படி உட்பிரிவு செய்து தனிப்பட்டாவும் வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு பட்டா இன்று வரை தரவில்லை. திருவண்ணாமலை தாசில்தார் பட்டா எண் 283 என் பெயருக்கு பட்டா வழங்கியது எனக்கு இன்று வரை தெரியாது. அந்த பட்டா படி நான் தான் அனுபவித்து வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. அதே போல் மற்ற பாகஸ்தர்களுக்கும் உட்பிரிவு செய்யப்பட்டு தனிபட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என் தந்தை இறந்த பிறகு அவருக்கு ஒதுக்கப்பட்ட 2/6 ல் சுப்பிரமணி என்பவர் பழனி என்பவருக்கு அவருக்கு ஒதுக்கப்பட்ட 5 ல் 1 பாகத்தை 14.12.2006ல் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் நான், வேலு, அண்ணாதுரை ஆகியோர் கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. அதே போல் அண்ணாதுரை அவருக்குரிய பிரிபடாத 5ல் 1 பாகத்தை 20.8.2007ல் வேலு என்பவருக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் முன்னிலைக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

அதே போல் நான் பிரிபடாத 5ல் 1 பாகத்தை பழனிக்கு கிரையம் கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். அந்த கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1. 2/6ல் 5ல் 3 பாகம் பழனி என்பவருக்கும், மீதி 5 ல் 2 பாகம் செல்வம் (எ) செல்வகுமாருக்கு சொந்தம் என்றால் சரிதான். செல்வம் கிரையம் வாங்கிய சொத்தில் மெத்தை வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். தாவா

முதல் இன சொத்தான 8/6 ஏ கிணறு மற்றும் 5 எச்.பி. பம்பு செட் உள்ளது என்றால் சரிதான். தாவா 1வது இன சொத்து கூட்டாக சுப்பிரமணி, பழனி மற்றும் அண்ணாதுரைக்கு கூட்டாக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பட்டா 282 தாவா 1வது இன சொத்துக்கு அண்ணாதுரை, சுப்பிரமணி, பழனி ஆகியோர் பெயரில் கூட்டாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 2வது இன சொத்தில் கிணறோ, பம்பு செட்டோ இல்லை என்றால் சரிதான்.

25.3.2011ல் வேலு இறந்து விட்டார். அவருடைய வாரிசுகள் 2 முதல் 5 என சொன்னால் சரிதான். பழனி சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்து விட்டார். அவருடைய வாரிசுதாரர்கள் 5 முதல் 7 பிரதிவாதிகள். சுப்பிரமணி சுமார் 3 ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டார், அவருடைய வாரிசுதாரர்கள் 1 முதல் 4 பிரதிவாதிகள். என் அப்பா வெள்ளைய கவுண்டர் 20.12.2001ல் இறந்து விட்டார். என் தாயார் பார்வதி சுமார் 2 ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டார். ( வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/- அய்யாசாமி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.